முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்!

விடியல் பயிற்சி மையம்
வேலூர்
செல் : 9092997509, 9487640063, 8122706441
www.vidiyalarni.blogspot.in

இங்கு வெளியிடப்பட்டுள்ள விடைகள் அனைத்தும் விடியல் பயிற்றுநர் குழுவின் கணிப்பே. TNPSC-ஆல் வெளியிடப்படும் விடைகளே முடிவானவையாகும். எனினும் இந்த Group II A தேர்வின் Cut-off மதிப்பெண்ணைக் கணித்திட எமது www.facebook.com/vidiyal.vellore என்ற முகநூல் பக்கத்தின் பின்னூட்டத்திலும், மற்றும் vidiyalvarum@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் உங்களின் score விவரங்களை பெயர், இட ஒதுக்கீட்டுப் பிரிவு, ஊர் உள்ளிட்ட விவரங்களுடன் பதிவு செய்யுங்கள். கட்-ஆஃப் விவரங்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் எமது Blog-லும், முகநூலிலும் வெளியிடப்படும்

Visit us @ www.vidiyalarni.blogspot.in

Follow us @ www.facebook.com/vidiyal.vellore

## ANSWER KEYS FOR TNPSC - GROUP II A EXAM HELD ON 06.08.2017

### *பொதுத்தமிழும் பொது அறிவும்*

1. பொருந்தாததை கண்டறிந்து எழுதுக.

   A) ஐந்துகிலோ - எடுத்தல் அளவை ஆகுபெயர்

   B) நாலு லிட்டர் - முகத்தல் அளவை ஆகுபெயர்

   C) மூன்று மீட்டர் - நீட்டல் அளவை ஆகுபெயர்

   **D) இந்தியா வென்றது - உவமையாகுபெயர்**

2. தொழிற் பெயரைக் கண்டறிக.

   ‘வா’ -

   **A) வருதல்** B) வந்து C) வந்தான் D) வந்த

வேலூர்

3. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக

A) காசு, கூறை, கைப்பிடி, கிளி, கேணி **B) காசு, கிளி, கூறை, கேணி, கைப்பிடி**

C) கிளி, கைப்பிடி, காசு, கூறை, கேணி D) கேணி, காசு. கிளி, கூறை, கைப்பிடி

4. 'இனிய நண்ப' - இலக்கணக் குறிப்பு தருக.

**A) குறிப்புப் பெயரெச்சம்** B) தெரிநிலை பெயரெச்சம்

C) எதிர்மறைப் பெயரெச்சம் D) குறிப்பு வினையெச்சம்

5. "எதிரூன்றல் காஞ்சி, எயில் காத்தல் நொச்சி" - இதில் நொச்சி என்பது

**A) மதில் காத்தல்** B) மதில் வளைத்தல் C) மதில் பூச்சூடல் D) மதில் வாகை சூடல்

6. தமிழ் மூவாயிரம் எனப்படும் நூல் எது?

A) தேவாரம் B) திருவாசகம் **C) திருமந்திரம்** D) திருக்குறள்

7. "உண்பது நாழி உடுப்பவை இரண்டே" - என்று பாடிய புறநானூற்றுப் புலவர்

**A) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்** B) கணியன் பூங்குன்றனார்

C) நரிவெரூஉத் தலையார் D) ஔவையார்

8. உலகம் முழுவதையும் ஆலிக்கருதுபவர் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?

A) படை வரும் வரை **B) காலம் வரும் வரை** C) பணம் வரும் வரை D) பலம் வரும் வரை

9. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

**A) உமறுப்புலவர்** B) சீதக்காதி C) அபுல்காசிம் D) திருநாவுக்கரசர்

10. பொருத்துக

a) காகம் 1. கூவும்

b) குதிரை 2. கரையும்

c) சிங்கம் 3. கனைக்கும்

d) குயில் 4. முழங்கும்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| **D)** | **2** | **3** | **4** | **1** |

11. "மூலன்" என்னும் இயற்பெயரை உடையவர்

**A) திருமூலர்** B) அப்பர் C) சாத்தனார் D) தாயுமானவர்

12. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A) சிலப்பதிகாரம் **B) மணிமேகலை** C) குண்டலகேசி D) வளையாபதி

விடியல் வேலூர்

13. பொருத்துக.

a) திருவரங்கம் 1. சிதம்பரம்

b) திருச்சிற்றம்பலம் 2. ஸ்ரீரங்கம்

c) திருமறைக்காடு 3. மீனாட்சி

d) அங்கயற்கண்ணி 4. வேதாரணியம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| **B)** | **2** | **1** | **4** | **3** |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 1 | 4 | 2 | 3 |

14. மதுரையில் உலகத் தமிழ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

**A) 1981** B) 1982 C) 183 D) 1985

15. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்

A) பகுதி, சந்தி B) இடைநிலை, சாரியை

**C) பகுதி, விகுதி** D) விகுதி, சாரியை

16. உறுவேனில் - இலக்கணக் குறிப்பு யாது?

A) வினைத்தொகை **B) உரிச்சொற்றொடர்** C) பண்புத் தொகை D) வினையெச்சம்

17. "இறை, செப்பு" என்பன கீழ்கண்ட எச்சொல்லுக்கு வழங்கும் வேறுபெயர்கள்

A) வினா B) மொழி **C) விடை** D) இறைவன்

18. கீழ்காணும் தொடரில் சரியான விடையைத் தேர்வு செய்க.

A) யானையில் கண் சிறியது B) யானையின் கண்கள் சிறியது

**C) யானையின் கண்கள் சிறியன** D) யானையின் கண் சிறியன

19. குலசேகர ஆழ்வார் இயற்றிய நூல் எது?

A) நந்திக்கலம்பகம் **B) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்**

C) கலித்தொகை D) நற்றிணை

20. கள்ள வேடம் புனையாதே - பல

கங்கையில் உன்கடம் நனையாதே

- இதல் 'கடம்' என்பதன் பொருள்

**A) உடம்பு** B) கால்கள் C) கைகள் D) தலை

21. திருஞானசம்பந்தருக்கு தொடர்பில்லாத தொடரை தேர்ந்தெடுக்க.

A) உமையாளர் பொற்கிண்ணத்தில் அளித்த ஞானப்பாலை உண்டார்

B) 220 தலங்கள் வழிபட்டார்

C) திராவிடச் சிசு என ஆதிசங்கரரால் குறிப்பிடப்பட்டார்

**D) அப்பூதியடிகளின் மூத்த மகளை உயர் பெற செய்தார்**

22. உமறுப்புலவர் பாடிய முதுமொழி மாலை என்ற நூலில் உள்ள பாக்கள்

A) 120 பாக்கள் B) 204 பாக்கள் **C) 80 பாக்கள்** D) 67 பாக்கள்

23. சாலை இளந்திரையன் தமிழக அரசின் "பாவேந்தர் விருது" பெற்ற ஆண்டு எது?

A) 1990 **B) 1991** C) 1993 D)1994

24. முதன் முதலில் இயக்கப்படமாக எடுக்கப்பட்ட விலங்கு

**A) குதிரை** B) நாய் C) பூனை D) மான்

25. பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள் ________ வகைப்படும்.

**A) இரண்டு** B) மூன்று C) நான்கு D) ஐந்து

26. இந்தியாவில் மட்டுமல்லாமல் ________, ________ ஆகிய நாடுகளில் குடியரசுத் தலைவர்களாகவும், தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது.

A) சிங்கப்பூர், மலேசியா **B) சிங்கப்பூர், மொரிசியசு**

C) சிங்கப்பூர், இலங்கை D) சிங்கப்பூர், பினாங்க

27. சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம், எத்தனை மாத்திரை அளிவினதாய்க் குறைந்து ஒலிக்கும்

A) ஒன்றே கால் மாத்திரை **B) ஒன்றரை மாத்திரை**

C) ஒன்றே முக்கால் மாத்திரை D) ஒரு மாத்திரை

28. "இரட்டைக்கிளவு இரட்டிற் பிரிந்திசையா" எனக் குறிப்பிடும் நூல்

A) தொல்காப்பியம் **B) நன்னூல்** C) அகப்பொருள் D) அகத்தியம்

29. பொருந்தாததைஎடுத்து எழுதுக.

A) அரசன் வந்தது - திணை வழு B) கபிலன் பேசினாள் - பால் வழு

C) குயில்கள் கூவியது - எண் வழு **D) கமலா சிரித்தாய் - கால வழு**

30. வைத்தோரைக் கூட வையாதே - இந்த
வையமுழுதும் பொய்த்தாலும் பொய்யாதே

A) குடும்பைச் சித்தர் **B) கடுவெளிச்சித்தர்**

C) திருமூலர் D) கவிமணி

31. 26 முதல் 32 வயது வரை உடைய பருவ மகளிர்

A) மடந்தை B) அரிவை C) மங்கை **D) தெரிவை**

32. குமரகுருபரர் எம் மொழிகளில் புலமை மிக்கவர்

A) தமிழ், வடமொழி **B) தமிழ், வடமொழி, இந்துஸ்தானி**

C) தமிழ், மலையாளம் D) தமிழ், ஆங்கிலம்

33. "உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்" என்று கூறியவர்

A) கம்பர் B) திருவள்ளுவர் C) இளங்கோவடிகள் **D) வள்ளலார்**

விடியல் வெல்லுர்

34. “இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோ டண்டெனக் கேட்டது தெளிதல்”
-இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

A) சீவகசிந்தாமணி B) சிலப்பதிகாரம் **C) மணிமேகலை** D) கம்பராமயணம்

35. “ஒன்று கொலாம்” என்னும் திருப்பதிகம் பாடியவர் யார்?

A) சேக்கிழார் **B) திருநாவுக்கரசர்**
C) இளங்கோவடிகள் D) பாரதியார்

36. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விரும்பத்தை உண்டாக்கவது என்று கூறியவர்?

A) அம்பேத்கார் **B) கெல்லட்**
C) கமில்சுவலிபில் D) முனைவர் எமினோ

37. ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தை கைக் கொண்டு வாழவிடுவதே தருமம்” - எனக் கூறியவர்

**A) இராணி மங்கம்மாள்** B) அஞ்சலையம்மாள்
C) வள்ளியம்மை D) வேலுநாச்சியார்

38. உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வை விட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர். உன் நலத்தை விட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும் போது உன் நலம், உயர்வு, மனம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு - இக்கூற்று யாருடைய கடிதப் பகுதி?

A) பேரறிஞர் அண்ணா B) அன்னை இந்திரா காந்தி
**C) மு. வரதராசனார்** D) திரு.விக.

39. கரணத்தோ __________ எனப் பிரியும்.

A) கரணம் + தேர் **B) கரணத்து + ஏர்**
C) கரன் + அத்து + ஏர் D) காரணம் + தேர்

40. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

A) இல்லாரை எள்ளுவர் செல்வரை எல்லாரும் B) இல்லாரை செல்வரை எல்லாரும் எள்ளுவர்
**C) இல்லாரை எல்லாரும் எள்ளுவர் சேல்வரை** D) செல்வரை எல்லாரும் எள்ளவரை இல்லாரை

41. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

A) குணநலம் நலனே சான்றோர் பிறநலம் B) சான்றோர் நலனே குணநலம் பிறநலம்
**C) குணநலம் சான்றோர் நலனே பிறநலம்** D) சான்றோர் குணநலம் நலனே பிறநலம்

42. பொருந்தாத இணையைக் கண்டறிக.

A) மேதி - எருமை B) சந்தம் - அழகு
**C) கோதில் - பசு** D) அங்கணர் - சிவன்

43. பொருத்துக. பொருளறிந்து பொருத்துக.

| | |
|---|---|
| a) நயனம் | 1. இருள் |
| b) இந்து | 2. புன்னகை |
| c) முறுவல் | 3. கண்கள் |
| d) அல் | 4. நிலவு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | **3** | **4** | **2** | **1** |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 2 | 1 | 4 |

44. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

**A) பன்னாடு தந்த மாறன் வழுதி** B) இளம் பெருவழுதி

C) உக்கிரப் பெருவழுதி D) பாண்டியன் மாறன் வழுதி

45. உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக.

புரிசை

A) வேகம் B) வளம் **C) மதில்** D) மேகம்

46. சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க

“உரும”

A) இடுப்பு **B) இடி** C) மேகம் D) கதிரொளி

47. “பகுத்தறிவுக் கவிராயர்' எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்

A) ந. பிச்சமூர்த்தி **B) உடுமலை நாராயணகவி**

C) சுரதா D) வாணிதாரன்

48. பொருத்துக.

| | |
|---|---|
| a) எட்பர்டு மை பிரிட்சு | 1. ஒருவர் மட்டும் பார்க்கும் படக் கருவி |
| b) எடிசன் | 2. இயக்கப்படம் |
| c) ஈஸ்ட்மன் | 3. ஓடும் குதிரையை வைத்து இயக்கப்படம் |
| d) பிரான்சஸ் | 4. படசுருள் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| **B)** | **3** | **1** | **4** | **2** |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 4 | 2 | 3 | 1 |

49. பாவணர், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக பணியமர்த்தப்பட்ட ஆண்டு

**A) 08.05.1974** B) 05.01.1981 C) 07.02.1902 D) 12.04.1976

விடியல் வேலூர்

50. தமிழர் புலம் பெயரக் காரணம்

A) பஞ்சம், அந்நியர் படையெடுப்பு
B) வறுமை, மேலை நாட்டின் மோகம்
C) வாணிகம், தமிழ்நாட்டில் வாழ விருப்பம் இன்மை
**D) வாணிகம், வேலைவாய்ப்பு**

51. 'பாலை நிலத்திற்குரிய பறவைகள்' எவை?

A) கிளி, மயில்
B) நாரை, அன்னம்
**C) புறா, பருந்து**
D) கடற்காகம்

52. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று
- இதில் அமைந்து வரும் மோனை

A) இணை மோனை
**B) பொழிப்பு மோனை**
C) ஒரூஉ மோனை
D) கூழை மோனை

53. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்
-இதில் அமைந்து வரும் தொடைநயம்

**A) அடி முரண் தொடை**
B) அடி மோனைத் தொடை
C) அடிஇயைபுத் தொடை
D) எதுவுமில்லை

54. 'அரியவற்றுள்' - இச்சொல்லை அசைபிரித்து சரியான விடையை எழுதுக.

A) நிரை நேர் நேர்
**B) நிரை நிரை நேர்**
C) நிரை நேர் நேர்
D) நேர் நேர் நிரை

55. ' இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' - எனப் பாடியவர்

A) பாரதியார்
**B) பாரதிதாசன்**
C) சுரதா
D) திருவள்ளுவர்

56. கல்லை சேர்த்துக் கடலில் எறிந்தபோது கல்லினை தெப்பமாகக் கொண்டு கரையேறியவர்

A) பெரியாழ்வார்
B) அப்பூதியடிகள்
C) மாணிக்கவாசகர்
**D) அப்பர்**

57. "ருபாய்த்" என்பதன் பொருள்

A) மூன்றடிச் செய்யுள்
**B) நான்கடிச் செய்யுள்**
C) இரண்டடிச் செய்யுள்
D) ஐந்தடிச் செய்யுள்

58. அணுத் துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் வைத்து, திருக்குறளை பாதுகாக்கும் நாடு?

A) இங்கிலாந்து
B) சீனா
**C) உருசிய நாடு**
D) அமெரிக்கா

59. 'தமிழ் ஒன்றே தமிழரை பிணைத்து ஒற்றமைப் படுத்த வல்லது, தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு' - இக்கடிதப் பகுதி யாருடையது?

A) திரு. வி. கலியாண சுந்தரனார்
**B) மு. வரதராசனார்**
C) பேரறிஞர் அண்ணா
D) ஜவஹர்லால் நேரு

விடியல்

60. “தேசியம் காத்த செம்மல், எனத் திரு.வி.கல்யாண சுந்தரனாரால் பாராட்டப் பெறுபவர்”

A) அம்பேத்கார் B) அண்ணா

**C) முத்துராமலிங்கர்** D) பெரியார்

61. காமராசரின் அரசியல் குரு

A) காந்தியடிகள் B) பேரறிஞர் அண்ணா

C) நேரு **D) சத்திய மூர்த்தி**

62. “பாவலரேறு பெருஞ்சித்திரனார்” எழுதாத நூல் எது?

A) பாவியக் கொத்து B) பள்ளிப் பறவைகள்

C) கொய்யாக் கனி **D) குறிஞ்சித் திட்டு**

63. பிறமொழிச் சொற்களுக்க ஏற்றத் தமிழ் சொற்களைப் பொருத்துக

a) மீனாட்சி 1) அங்கயற்கண்ணி

b) மதுரவசனி 2) வாள்நெடுங்கண்ணி

c) கட்கநேத்ரி 3) நீள்நெடுங்கண்ணி

d) விசாலாட்சி 4) தேன்மொழிப்பாவை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 3 | 2 |
| **B)** | **1** | **4** | **2** | **3** |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 1 | 2 | 4 | 3 |

64. பிழையற்றத் தொடரைத் தேர்வு செய்க.

A) ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

**B) ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்**

C) ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

D) ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவதரு மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

65. “மாகதம்” எனப்படுவது

A) மதுரகவி B) சித்திரகவி **C) வித்தாரகவி** D) ஆசுகவி

66. அகத்திணையின் வகைகள்

A) ஐந்து B) ஆறு C) மூன்று **D) ஏழு**

67. “அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்”

-இவ்வரிகள் இடம் பெற்ற நூலின் பெயர்.

A) தேவாரம் **B) திருவாசகம்** C) ஏர் எழுபது D)திருக்கோவை

68. “கேழல்” என்பதன் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

A) எருமை B) புலி C) கரடி **D) பன்றி**

விடியல் வேலூர்

69. பட்டியல் Iஐ பட்டியல் IIடன் பொருத்தி விடை எழுது.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) திருஞானசம்பந்தர் | 1) திருவாதவூர் |
| b) திருநாவுக்கரசர் | 2) திருவெண்ணெய் நல்லூர் |
| c) சுந்தரர் | 3) திருவாமூர் |
| d) மாணிக்கவாசகர் | 4) சீர்காழி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | **4** | **3** | **2** | **1** |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 2 | 3 | 4 | 1 |

70. “கொங்குதேர் வாழ்க்கை அஞ்சறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ”
- இவ்வரிகள் இடம்பெற்ற நூல் எது?

A) நற்றிணை B) கலித்தொகை **C) குறுந்தொகை** D) புறநானூறு

71. “தேம்பாவணி” எத்தனை காண்டங்களை உடையது

A) இரண்டு **B) மூன்று** C) நான்கு D) ஐந்து

72. தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட முதல் தேசிய சமுதாய நாடகம் எது?

**A) கதரின் வெற்றி** B) தேசியக் கொடி C) தேசியக்கொடி D) தமிழ்தேசியம்

73. படித்துப் புரிந்து சரியான விடையைத் தேர்ந்தெடு

1) தலைமை உன்னைத் தேடிக் கொண்டு வந்தால் வரட்டும்
2) நீ அதைத் தேடிக் கொண்டு போய் அலையாதே
3) நீ தேட வேண்டுவது தொண்டு 4) தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து
என்பது என் நெறியாக இருக்கட்டும்

A) நேரு எழுதிய கடிதவரிகள் **B) மு.வ. எழுதிய கடிதவரிகள்**

C) அண்ணா எழுதிய கடிதவரிகள் D) காந்தி எழுதிய கடிதவரிகள்

74. “வட்ட மேசை மாநாடு நடந்த ஆண்டு”

A) 1915 B) 1917 **C) 1930** **D) 1932**

75. கரிசலாங்கண்ணி என்னும் மூலிகையை குறிக்காத பெயர்

A) கரிசாலை B) கையாந்தகரை **C) சிங்கவல்லி** D) தேகராசம்

76. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
-இக்குறளில் பயின்று வரும் பொருள்கோள் எது?

**A) நிரல்நிறைப் பொருள்கோள்** B) ஆற்றுநீர் பொருள்கோள்

C) மொழிமாற்றுப் பொருள்கோள் D) விற்பூட்டுப் பொருள்கோள்

விடியல் வேலூர்

77. 'கேண்மை' - இச்சொல்லின் எதிர்ச்சொல்

A) துன்பம் **B) பகை** C) நட்பு D) வலிமை

78. சொல்லை பொருளோடு பொருத்துக.

a) வனப்பு 1) வலிமை

b) அடவி 2) அழகு

c) வீறு 3) இனிமை

d) மதுரம் 4) காடு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | **2** | **4** | **1** | **3** |
| B) | 2 | 3 | 1 | 4 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 1 | 3 | 2 | 4 |

79. பொருத்துக.

a) திரிகடுகம் 1) பெருவாயின் முள்ளியார்

b) ஆசாரக்கோவை 2)நல்லாதனார்

c) பழமொழி நானூறு 3) காரியாசான்

d) சிறுபஞ்சமூலம் 4) முன்றுரை அரையனார்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | **2** | **1** | **4** | **3** |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 3 | 1 | 4 | 2 |

80. தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?

A) கபிலர் B) நரிவெரூஉத் தலையார்

**C) அறியப்படவில்லை** D) ஓதலாந்தையார்

81. ஐஞ்சிறு காப்பியங்கள் - என்னும் வகைப்பாட்டில் இல்லாத நூல் எது?

A) நாக குமார காவியம் B) நீலகேசி **C) குண்டலகேசி** D) சூளாமணி

82. "ஒரு நாடு வளமுடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்" எனக் கூறியவர் யார்?

A) பாரதியார் B) அம்பேத்கார் **C) பெரியார்** D) அறிஞர் அண்ணா

83. இந்தியா நாட்டை'மொழிகளின் காட்சிச் சாலை' என்று கூறியவர்

A) குமரிலபட்டர் B) கால்டுவெல் **C) ச.அகத்தியலிங்கம்** D) ஹீராஸ் பாதிரியார்

84. 'நவ்வி' - இச்சொல்லின் பொருளை எழுதுக.

**A) மான்** B) நாய் C) புலி D) பசு

85. "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை" எனக் கூறியவர்

A) காந்தியடிகள் B) பாரதியார்

**C) பசும்பொன் முத்துராமலிங்கர்** D) பாரதிதாசன்

விடியல் வேலூர்

86. குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்துவது

A) கார்பன் டை ஆக்ஸைடு B) ஆக்சிஜன்

**C) குளோரோஃபுளுரோ கார்பன்** D) மீத்தேன்

87. " தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றி தழைத்தோங்ககூம் செய்யும்" - எனக் கூறியவர்

A) டாக்டர் கிரௌல் **B) கால்டுவெல்** C) வீரமாமுனிவர் D) ஜி.யு.போப்

88. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை
- எனக் கவிதை பாடியவர்

A) சுரதா **B) கண்ணதாசன்** C) பாரதிதாசன் D) மு. மேத்தா

89. எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.
- எனப் பாடியவர்

**A) பாரதிதாசன்** B) பாரதியார் C) சுரதா D) கண்ணதாசன்

90. மரக்கலத்தை குறிக்கும் நான்கு சொற்களை தேர்ந்தெடுக்க

A) கலம், தோணி, புணரி, மிதவை B) கலம், பரிசில், ஓடம், பரவை

**C) கலம், வங்கம், புணை, அம்பி** D) கலம், பரிசில், ஆழி, பஃறி

91. ஓடையில் யானையும் யானைக் ________ம் நின்றன

**A) யானைக் கன்று** B) யானைக் குட்டி C) யானைக் குருளை D) யானைப் பிள்ளை

92. Refrigerator - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க

A) குளிர் பதனப் பெட்டி **B) குளிரூட்டும் பெட்டி**

C) குளர்சாதனப் பெட்டி D) குளர் காக்கும் பெட்டி

93. 'கோ' - இச்சொல்லின் உரிய பொருளைக் கண்டறிக

**A) அரசன்** B) அன்னம் C) ஆதவன் D) அன்பு

94. உவமை விளக்கும் பொருளை கண்டறிந்து பொருத்துக.

a) அத்திப் பூத்தது போல 1. ஒற்றுமை

b) உயிரும் உடம்பும்போல 2. பயனில்லை

c) ஆற்றில் கரைத்த புளி 3. வேதனை

d) இடி விழுந்த மரம் போல 4. அரிய செயல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| **C)** | **4** | **1** | **2** | **3** |
| D) | 4 | 2 | 1 | 3 |

விடியல் வேலூர்

95. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது

A) பாண்டிய மன்னன் B) குலசேகர ஆழ்வார்

**C) மூன்றாம் நந்திவர்மன்** D) பல்லவ மன்னன்

96. எட்டுத் தொகை நூல்களுள் முதலாவதாக அமைந்த நூல்

A) குறுந்தொகை **B) நற்றினை** C) ஐங்குறுநூறு D) பதிற்றுப்பத்து

97. சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர் யார்?

A) உமறுப்புலவர் **B) கம்பர்** C) நாமக்கல் கவிஞர் D) பாரதியார்

98. சரியான தொடரைக் கண்டறிக.

இரட்டைக் காப்பியம் என்பன

A) மணிமேகலையும், சீவக சிந்தாமணியும் B) சிலப்பதிகாரமும், வளையாதியும்

**C) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்** D) மணிமேகலையும், வளையாபதியும்

99. வெள்ளிப்பிடி அருவா

ஏ! விடலைப் பிள்ளை கைஅருவா

சொல்லியடிச்ச அருவா

-எப்பாடல் வகையை சார்ந்தது

**A) தொழிற் பாடல்** B) விளையாட்டுப் பாடல்

C) ஒப்பாரிப் பாடல் D) சடங்குப் பாடல்

100. "யாமறிந்த புலவரிலே இளங்கோவைப் போல்" - என இளங்கோவைப் புகழ்ந்து பாடியவர் யார்?

A) வாணிதாசன் B) கணியன் **C) பாரதியார்** D) பாரதிதாசன்

101. கீழ்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்தி உள்ளது?

I) கிரிகார் மெண்டல் - நியுரோஸ்போரா II) T.H.மார்க்கன் - டிரோசோபில்லா

III) C.B. பிரிட்ஜஸ் - தோட்டப் பயறு IV) J. H. முல்லர் - எலிகள்

A) I **B) II** C) III D) IV

102. $(x + y)^2 + 9 (x + y) + 8$ –ன் காரணிகள்

A) $(x + y + 1) (x + y)$ **B) $(x + y + 1) (x + y + 8)$**

C) $(x + y + 1) (x + y + 6)$ D) $(x + y + 8) (x + y + 2)$

103. முதல் 'n' ஒற்றை இயல் எண்களின் கூடுதலுக்கும் முதல் 'n' இயல் எண்களின் கூடுதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

A) $\frac{n}{2}+1$ **B) $\frac{n(n-1)}{2}$** C) $\frac{n(n+1)}{2}$ D) $\frac{n(n+1)(2n+1)}{6}$

104. ஈ.வெ.ராமசாமிக்கு முன் வைக்கம் சத்தியாகிரகத்தை தொடங்கிய மூன்று தலைவர்கள் அவர்களாவது

A) தி.பிரகாசம், தி.கே. மாதவன் மற்றும் கே.பி. கேசவ மேனன்

**B) தி.கே. மாதவன், கே.பி. கேசவமேனன் மற்றும் ஜார்ஜ் ஜோசப்**

C) ஜார்ஜ் ஜோசப், தி. பிரகாசம் மற்றம் தி.கே, மாதவன்

D) கே.பி. கேசவ மேனன், தி. பிரகாசம் மற்றம் ஜார்ஜ் ஜோசப்

105. 'நவீன இந்தியாவின் தந்தை' என்றழைகப்படுவபர் யார்?

A) அம்பேத்கார் B) 'பெரியார்' ஈ.வெ.ரா C) காந்திஜி **D) இராஜாராம் மோகன் ராய்**

106. வாணிப நடவடிக்கையில் முற்றுரிமை தடைச்சட்டம் (MRTP Act), 1969 ஆனது ரத்து செய்யப்பட்டு போட்டிச் சட்டம் 2002ற்கு இக்காலத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது

A) 2002 **B) 2009** C) 2013 D)2016

107. S.N. அகர்வாலா உருவாக்கிய காந்திய திட்டத்தின் அடிப்படை நோக்கமானது,

A) வேளாண்மை வளர்ச்சி

**B) குடிசை மற்றும் கிராம தொழிலகங்களின் வளர்ச்சி**

C) சமத்துவத்தை அடைவது

D) ஒட்டுமொத்த இந்தியாவின் மூலம் மற்றும் கலாச்சார நிலையினை உயர்த்துதல்

108. இந்திய திட்டக்குழுவின் இறுதியான துணைத் தலைவர்

A) மன்மோகன் சிங் B) நரேந்திர மோடி

C) அருண் ஜெட்லி **D) மான்டேக் சிங் அலுவாலியா**

109. இந்தியாவில் நீதிப்புனராய்வு அதிகாரம் வரையறைக்குட்பட்டது, ஏனெனில்

A) செயல்துறை உயர்வானது B) சட்டத்துறை உயர்வானது

**C) அரசியலமைப்பு உயர்வானது** D) நீதிபதிகள் இடமாறுதலுக்கு உட்பட்டவர்கள்

110. இந்திய அரசாங்கம் பாரத் ரத்னா மற்றும் பத்மஸ்ரீ விருதுகளை ___ விதியின் கீழ் உருவாக்கியுள்ளது

A) இந்திய அரசியல் சட்டவிதி - 14 **B) இந்திய அரசியல் சட்டவிதி - 18**

C) இந்திய அரசியல் சட்டவிதி - 25 D) இந்திய அரசியல் சட்டவிதி - 32

111. மணிப்பூரின் இரும்பு பெண்மணி இரோம் ஷர்மிளா, 2017 மணிப்பூர் மாநில சட்டமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகள் எத்தனை?

A) 10 வாக்குகள் B) 30 வாக்குகள் C) 60 வாக்குகள் **D) 90 வாக்குகள்**

112. எந்த மாவட்டத்தில் புதிய பல் மருத்துவக் கல்லூரி 2017-ஆம் ஆண்டில் தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் உத்திரவிட்டுள்ளார்?

A) சென்னை B) தருமபுரி **C) விருதுநகர்** D) புதுக்கோட்டை

113. எந்த ஒரு மாநில அரசு இந்த நிதி ஆண்டிலிருந்து [ஏப்ரல் 1- மார்ச் 31] காலண்டர் ஆண்டிற்கு [ஜனவரி 1 - டிசம்பர் 31] க்கு மாற்றியுள்ளது?

A) கேரளா **B) மத்திய பிரதேசம்** C) பஞ்சாப் D) மேற்கு வங்கம்

114. ஊடுருவல் மின்னணு நுண்ணோக்கியில் (TEMல்) ___ பொருட்களை பெரிதுப்படுத்த பயன்படுகிறது,

A) ஒளி B) ஆப்டிகல் லென்ஸ்கள்

**C) எலக்ட்ரான்கள் (மின்னணுக் கதிர்கள்)** D) ஸ்கேனர்கள்



விடியல் வேலூர்

115. குளுக்கோசின் சுவாச ஈவு மதிப்பு

A) 0.5 **B) 1.0** C) 1.5 D) 2.0

116. 36 வினாடி என்பது ஒரு மணியில் எத்தனை சதவீதம் ஆகும்?

A) 6% **B) 1%** C) 10% D) 36%

117. $\left[\frac{x^m}{x^n}\right]^{m+n} \cdot \left[\frac{x^n}{x^l}\right]^{n+l} \cdot \left[\frac{x^l}{x^m}\right]^{l+m} = \dots$

**A) 1** B) -1 C) $x^{m+n+l}$ D) $\frac{1}{x^{m+n+l}}$

118. x, y இவற்றின் மீ.பொ.ம z எனில், x, y ன் மீ.பொ.வ என்ன?

**A) $\frac{xy}{z}$** B) $\frac{xz}{y}$ C) $\frac{yz}{x}$ D) $xy$

119. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை

A) 25 B) 100 **C) 72** D) 2000

120. புரட்சிகரமான தேசியவாதி நீலகண்ட பிரம்மச்சாரி பிறந்த இடம்

A) திருநெல்வேலி B) மதுரை **C) சீர்காழி** D) சென்னை

121. மிகச்சிறிய மெர்குரி கோளானது சூரியனை சுற்றி வர 88 நாட்கள் மட்டுமே ஆகின்றது. ஏனெனில்,

A) அதன் அளவு **B) சுழலும் வேகம்**

C) சூரியனிடமிருந்து உள்ள தூரம் D) அதன் மெல்லிய வளிமண்டலம்

122. பின்வரும் பேரிடர்பாடுகளை அதன் வகைப்பாட்டோடு பொருத்தி விடை காண்க

a) பனிப்புயல் 1) நீரியல் பேரழிவு

b) ஆழிப்பேரலை 2) சுகாதார பேரழிவு

c) அணுவிபத்து 3) வளிமண்டல பேரழிவு

d) தொற்றுநோய் 4) மானுட பேரழிவு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| **D)** | **3** | **1** | **4** | **2** |

123. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 370படி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டள்ள நிலையில் நாடாளுமன்றம் ஜம்மு காஷ்மீர் மாநில தொடர்புடைய சட்டங்கள் இயற்றுவது

**A) பட்டியல் I மற்றும் III (ஏழாவது அட்டவணை)**

B) பட்டியல் I (ஏழாவது அட்டவணை) மட்டும்

C) பட்டியல் II (ஏழாவது அட்டவணை) மட்டும்

D) பட்டியல் I, II மற்றும் III (ஏழாவது அட்டவணை)

124. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் புனிதமானவையாகஏற்கப்பட்டமைக்கு தூண்டுதலாக இருந்தது எது?

A) அமெரிக்க விடுதலைப் பிரகடனம் **B) பிரெஞ்சுப் புரட்சி**

C) ரஷ்யப் புரட்சி D) ஐ.நா சாசனம்

125. இந்திய ஜனாதிபதி தேர்தல், 2017க்கான தேர்தல் கல்லூரியின் மொத்த வாக்குகளை கண்டுபிடி

A) 11,00,346 வாக்குகள் B) 11,04,546 வாக்குகள்

C) 12,06,232 வாக்குகள் D) 13,00,346 வாக்குகள்

**Total Number of Votes according to Election Commission of India is 10,98,903**

126. நீண்டகால திட்டம் 2023ல் கீழ்கண்டவைகளில் எது முக்கிய நோக்கமாக கருதப்படுகிறது?

**A) வேலைவாய்ப்பை உருவாக்குதல்** B) எண்மத் தொழில்நுட்பம்

C) விருது D) சன்மானம்

127. எறிபொருள் இயக்கம் என்பது மாறாத ________ கொண்ட கிடைமட்ட இயக்கம் மற்றும்மாறாத ________ கொண்ட செங்குத்து இயக்கம் ஆகியவற்றின் கலவை ஆகும்.

A) முடுக்கம், திசைவேகம் **B) திசைவேகம், முடுக்கம்**

C) இடப்பெயர்ச்சி, திசைவேகம் D) திசைவேகம், இடப்பெயர்ச்சி

128. அணுக்கரு விசையானது

A) மின்னூட்டத்தை சார்ந்துள்ளது

B) சுழற்சியை சார்ந்திராது

**C) மின்னூட்டம் மற்றும் சுழற்சியை சார்ந்திராது**

D) சுழற்சியை சார்ந்துள்ளது ஆனால் மின்னூட்டம் சார்ந்திராது

129. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் சிலவற்றின் மீது வரி விதிக்கப்படுகின்றது. இது மைய அரசுக்குச் செல்கிறது. அந்த வரி

A) நேர்முக வரி B) மறைமுக வரி **C) கலால் வரி** D) சேவை வரி

130. $\frac{x^2-2x}{x^2+2x} \times \frac{3x+6}{x-2}$ ன் மதிப்பு

A) 3x **B) 3** C) 3x+2 D) x – 2

131. பின்வருவனவற்றுள் எது சரியான ஏறுவரிசையில் அமைந்துள்ளது?

**A) 8ல் 25%, 6ல் 40%, 9ல் 30%, 15ல் 20%** B) 15ல் 20% 8ல் 25%, 9ல் 30%, 6ல் 40%

C) 9ல் 30% 6ல் 40%, 8ல் 25%, 15ல் 20% D) 15ல் 20% 9ல் 30%, 6ல் 40%, 8ல் 25%

132. பின்வருவனவற்றுள் பரப்பளவில் பெரியது எது?

A) அடிப்பக்கம் 10 செ.மீ, உயரம் 8 செ.மீ கொண்ட முக்கோணம்

B) 12செ.மீ, 5 செ.மீ மற்றும் 13 செ.மீ பக்கங்கள் உள்ள முக்கோணம்

**C) 10 செ.மீ பக்கம் உள்ள சமபக்க முக்கோணம்**

D) செங்கோணத்தை உள்ளடக்கிய பக்கங்கள் 3 செ.மீ மற்றும் 4 செ.மீ உள்ள முக்கோணம்

விடியல் வேலூர்

133. தம்மபாணி எவ்விடத்தின் பழைய பெயர்?

A) தமிழ்நாடு B) கேரளம் **C) ஸ்ரீலங்கா** D) கர்நாடகம்

134. 'பாராளுமன்றத்தின் தலைசிறந்த நபர் விவேகானந்தர்' என்று குறிப்பிட்ட பத்திரிகையின் பெயர்

A) யங் இந்தியா B) சமாச்சார் தர்பன் C) சுதேசி மித்ரன் **D) நியூயார்க் ஹெரால்ட்**

135. பெண்களின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பிற்கான ஆதரவு (STEP) என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

**A) 1986 - 87** B) 1990-91 C) 1995- 96 D)1996 – 97

136. இந்திய பிரதமரால், மே 26, 2017ம் நாள் இந்தியாவிலேயே மிகவும் நீளமான சாலைப் பாலம் திறந்து வைக்கப்பட்டது. அது எந்த இரு மாநிலங்களை இணைக்கின்றது?

**A) அஸ்ஸாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம்** B) அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர்

C) அஸ்ஸாம் மற்றும் திரிபுரா D) மணிப்பூர் மற்றும் திரிபுரா

137. தீவிர மாவட்ட வேளாண் திட்டம் தொடர்பான முதல் படிநிலை இந்த ஆண்டு துவங்கப்பட்டது

A) 1951 - 52 **B) 1960 – 61** C) 1965 – 66 D) 1990 – 91

138. தமிழ்நாடு அரசின் 'புது வாழ்வு திட்டம்' தொடர்பான கீழ்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?

i) இத்திட்டம் 2005-ல் தொடங்கப்பட்டது

ii) உலக வங்கி இதற்கு நிதி உதவி வழங்குகிறது

iii) இதற்கான திட்ட செலவு 1,667 கோடி ரூபாய்

iv) தமிழ்நாட்டின் 26 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**A) அனைத்து கூற்றுகளும் சரி** B) (i), (ii) மற்றும் (iii) சரி

C) (ii), (iii) மற்றும் (iv) சரியானவை D) (i), (ii) மற்றும் (iv) சரியானவை

139. தமிழ்நாட்டில் எவ்வளவு சதவீதத்தில் மொத்த பயிர் சாகுபடிப் பரப்பில் மானாவாரிப் பகுதியில் பயிரிடப்படுகிறது?

A) 55% B) 57% C) 54% **D) 52%**

140. இந்திய நியூட்ரினோ ஆய்வுக்கூடம் தமிழகத்தின் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A) மதுரை **B) தேனி** C) கடலூர் D) சென்னை

141. கீழ்கண்ட பொருத்தங்களில் பண்புகளின் அடிப்படையில் எது தவறான பொருத்தமாகும்?

A) கணையம் - குளுக்ககான் B) சிறுகுடல் - ஸ்டோமட்டேஸ்டேடின்

**C) விந்தகம் - ஈஸ்ட்ரோஜென்** D) அட்ரீனல் சுரப்பி - குளுக்கோகார்டிகாய்ட்ஸ்

142. கீழ்கண்டவற்றுள் எந்த ஹார்மோன் கருப்பையின் மெது தசைகளைச் சுருக்க உதவுகிறது?

A) எபிநெப்ரின் B) இன்சுலின் **C) ஆக்ஸிடோசின்** D) குளுக்ககான்

143. A என்பதனை + எனவும், B என்பதனை ÷ எனவும், C என்பதனை × எனவும், D என்பதனை - எனவும் கொண்டால் $\frac{1}{5}C2B\frac{1}{5}A\frac{1}{5}D\frac{1}{5}=?$

**A) 2.1** B) 1.2 C) 2.5 D) 1.6

144. $\frac{x^3-1}{x+3} \div \frac{x^2+x+1}{3x+9}$ ன் மதிப்பு

A) 3x - 1 B) 3(x+1) **C) 3(x-1)** D)3x +2

145. பின்வருவனவற்றை கால வரைமுறைப்படுத்துக

1. செங்குட்டுவன்
2. இமயவரம்பன்
3. கணைகால் இரும்போறை
4. குட்டுவன் சேரல்

**A) 2,1,4,3** B) 4,2,3,1 C) 2,1,3,4 D) 3,2,4,1

146. சோழ நாட்டில் வருவாய் துறை எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) பெரும்தாரம் B) உடன்கூட்டம் **C) புரவுவரி** D) ஓலை நாயகம்

147. இந்திய மக்களின் உடல் நிலையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், சில காரணங்களால் எதிர்மறை போக்கு காணப்படுகிறது. மேற்கூறியவற்றிற்கு பின்வருபனவற்றில் சரியான விடைகளை குறிப்பிடுக.

I. HIV/AIDS கிராமப் புறங்களில் அதிகமாக உள்ளதால்

II. HIV /AIDS நகர்புறங்களில் அதிகமாக உள்ளதால்

III.இதய நோய் மற்றும் கேன்சர் கிராமப் புறங்களில் அதிகமாக உள்ளதால்

IV. இதயநோய் மற்றும் கேன்சர் நகர்புறங்களில் அதிகமாக உள்ளதால்

A) அனைத்தும் சரியானது B) I மற்றம் IIIசரியானது

**C) II மற்றம் IV சரியானது** D) I, III மற்றும் IV சரியானது

148. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்பு சட்ட விதிகள் 275 மற்றும் 282-ன் கீழ் வழங்கப்படும் மானியங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் தொடர்பாக சரியான ஒன்று அல்ல?

A) விதி 275-ன் கீழ், வழங்கப்படும் மானிய உதவி சட்டப்படியானது விதி 282-ன் கீழ் வழங்கப்படுவது விரிப்புரிமையானது

B) விதி 282-ன் கீழ் மத்திய அரசுக்கு திட்டம் சாரா செலவினங்களுக்கும் மானிய உதவி வழங்க அதிகாரம் உள்ளது.

C) விதி 275-ன் கீழ் நிதி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மானியங்களை வழங்கலாம்.

**D) விதி 282-ன் கீழ் அமைச்சரவை குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் மானியங்களை வழங்கலாம்.**

149. BSE's வர்த்தக புள்ளி 30,000 - புள்ளிகள் என்ற வரலாற்று உயர்த்தை முதலில் எந்த நாளில் எட்டியது?

A) 26 டிசம்பர் 2016 B) 26 ஜனவரி 2017 **C) 26 ஏப்ரல் 2017** D) 26 மே 2017



விடியல் வேலூர்

150. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) முழுவதும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட கிரையோஜெனிக் எந்திரத்தை வெற்றிகரமாக சோதனை செய்த நாள்

**A) ஜனவரி 25, 2017** B) ஜனவரி 30, 2017 C) ஏப்ரல் 1, 2017 D)மார்ச் 30, 2017

151. 7 செ.மீ. ஆரம் உள்ள அரைவட்டத்தின் பரப்பு

A) 7 செ.மீ B) 777 செ.மீ **C) 77 செ.மீ** D) 7777 செ.மீ

152. ஆக்ஸிஜனைக் கொண்டு $SO_3^{2-}$ முதல் $SO_4^{2-}$ ஆக்ஸிஜனேற்றம் செய்யும் கீழ்காணும் வினையில், $SO_3^{2-} + :O \rightarrow SO_4^{2-}$ எது லூயிஸ் அமிலமாகவும் எது லூயிஸ் காரமாகவும் செயல்படுகிறது?

**A) $SO_3^{2-}$ லூயிஸ் அமிலம் மற்றும் ஆக்ஸிஜன் லூயிஸ் காரம்**

B) ஆக்ஸிஜன் லூயிஸ் அமிலம் மற்றும் $SO_3^{2-}$ லூயிஸ் காரம்

C) இரண்டும் லூயிஸ் அமிலங்கல் D) இரண்டும் லூயிஸ் காரங்கள்

153. ஒரு பையனின் தற்போதைய வயது அவனது தங்கையின் வயதைப் போல இரு மடங்கு. 4 ஆண்டுகளுக்கு முன்பு அவனது வயது அவன் தங்கையின் வயதைப் போல மூன்று மடங்கு எனில், அவர்களது தற்போதைய வயது என்ன?

A) 18, 9 B) 14, 7 **C) 16, 8** D) 12, 6

154. $x^{3/2} : 9 = 16 : \sqrt{x}$ எனில் x ன் மதிப்பு என்ன?

A)±16 B)±3 C)±4 **D)±12**

155. 75 எண்களைக் கொண்ட ஒரு தொகுதியின் சராசரி 27 எனக் கணக்கிடப்பட்டது. பின்பு 53 என்ற எண் தவறுதலாக 43 என்று படிக்கப்பட்டது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, அத்தொகுதியின் சரியான சராசரியைக் காணவும்.

A) 26.13 **B) 27.13** C) 28.13 D) 25.13

156. எத்தனை ஆண்டுகள் முடிவில் ஒரு குறிப்பிட்ட அசலானது 8% வட்டி வீதத்தில் மூன்று மடங்காகும்

A) 24 **B) 25** C) 20 D)12

157. பயிரிடக் கூடிய நிலங்கள் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை உழப்படாத பொழுது. அது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

**A) பயன்பாடற்ற விளைநிலம்** B) நடப்பாண்டு தரிசு

C) பிற தரிசு D) நிலையான மேய்ச்சல் நிலம்

158. கங்கை-பிரம்மபுத்திரா அலையாத்தி காடுகளில் முக்கியமாக காணப்படும் மரவகையானது

**A) ரெடோடென்ட்ரோன்ஸ்** B) கடின பனை வகை

C) லாரல்ஸ் D) ஜினிப்பர்

159. மாநில சட்டமன்றத்தை கலைக்கும் அதிகாரம் மாநில ஆளுநருக்கு உள்ளதா?

**A) ஆம்** B) இல்லை

C) அவர் பரிந்துரை மட்டுமே செய்ய முடியும் D) குடியரசு தலைவர் மட்டுமே செய்ய முடியும்

160. நாடாளுமன்ற அவை விதிகளின்படி, சபா நாயகர் அனுமதித்தால், ஒரு தீர்மானத்திற்கான அறிக்கையை தேதி குறிப்பிடாமல் கொண்டு வரலாம் - அப்படி கொண்டு வரும் தீர்மானத்திற்கு என்ன பெயர்?

A) கவன ஈர்ப்பு தீர்மானம் B) ஒத்திவைப்பு தீர்மானம்

C) நம்பிக்கையில்லை தீர்மானம் **D) தேதியில்லா, பெயர் சூட்டப்பட்ட தீர்மானம்**

161. இந்தியாவில் எந்த அமைப்பைச் சார்ந்த விஞ்ஞானிகள் தற்போது நீரிலிருந்து ஆற்றல் எதுவும் பயன்படுத்தாமல் மின்சாரம் உருவாக்க முடியும் என கண்டறிந்துள்ளார்கள்?

**A) NPL, புதுடெல்லி** B) IISC, பெங்களுரு

C) IISER, கொல்கத்தா D) IIT, சென்னை

162. டிசம்பர் 20, 2016ல் பிரதம மந்திரி நாட்டின் முதன்முதலாக எந்த இடத்தில் இந்திய திறன் நிறுவனத்தை {IIS} துவக்கி வைத்தார்?

A) அகமதாபாத் B) பெங்களுரு **C) கான்பூர்** D) வாரணாசி

163. சூப்பர் நோவா என்பது ஒரு வெடி விண்மீன், சாதாரண பார்வைக்க புலப்பட கடைசி இரண்டு சூப்பர் நோவா எந்த வருடங்களில் தெரிந்தது?

A) 1600, 1980 B) 1601, 1982 **C) 1604, 1987** D) 1605, 1997

164. E=h$\gamma$ என்ற சமன்பாட்டை பயன்படுத்தி, பிளாங்க் மாறிலி 'h' ன் பரிமாணத்தைக் கணக்கிடுக. இங்கு E $\rightarrow$ ஆற்றல் $\gamma\rightarrow$ அதிர்வெண்

A) $MLT^{-1}$ **B) $ML^2T^{-1}$** C) $ML^{-1}T^{-2}$ D) $ML^{-2}T^{-1}$

165. ஓர் உருளையின் அடிப்பாகம் வட்ட வடிவில் இல்லை எனில் அது எவ்வாறு அழைக்கப்படும்?

A) வட்ட உருளை B) நேர் வட்ட உருளை

**C) சாய்வு உருளை** D) ஒழுங்கற்ற உருளை

166. 10மீ$^2$ என்பது எதற்கு சமம்?

A) 100 செமீ$^2$ B) 1000 செமீ$^2$ **C) 10000 செமீ$^2$** D) 100000 செமீ$^2$

167. எங்கு அகில இந்திய முஸ்லீம் லீக் 1906-ல் ஏற்படுத்தப்பட்டது?

A) மும்பை B) உத்திர பிரதேசம்

C) சென்னை **D) டாக்கா**

168. எப்பொழுது 'சுதேசி நாள்' இந்தியாவில் கொண்டாடப்பட்டது?

A) மே 27, 1932 B) மே 28, 1932 **C) மே 29, 1932** D) மே 30,1932

169. $x, x^{3/2}, x^2 x^{5/2}, \ldots\ldots$ என்ற தொடர் வரிசையின் 85வது உறுப்பு என்ன?

A) $x^{\frac{85}{2}}$ B) $x^{\frac{45}{2}}$ **C) $x^{43}$** D) $x^{44}$

170. ஒரு கூம்பின் ஆரம் மற்றும் சாயுயரம் முறையே 'r'மற்றும் 'l' எனில் கூம்பின் கன அளவு என்ன?

**A) $\frac{1}{3}\pi r^2\sqrt{l^2 - r^2}$** B) $\frac{1}{3}\pi r^2\sqrt{l^2 + r^2}$ C) $\pi r l$ D) $\pi r(l + r)$

171. கீழ்கண்ட பொருத்தத்தில் பண்புகளின் அடிப்படையில் எவை சரியானவை?

a) தைராய்டு ஹார்மோன் — 1. குசிங்ஸ் நோய்

b) இன்சுலின் — 2. மிக்ஸிடிமா

c) கார்ட்டிகோஸ்டிராய்ட்ஸ் — 3. அக்ரோமெகாலி

d) வளர் ஹார்மோன் — 4. நீரிழிவு நோய்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 4 | 2 | 1 | 3 |
| **D)** | **2** | **4** | **1** | **3** |

172. பட்டியல் I உடன் பட்டியல் II ஐப் பொருத்தி, பட்டியல்களுக்கு கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) P.A. சங்மா | 1. தெலுங்கு தேசம் கட்சி |
| b)G.M.C. பாலயோகி | 2. சி.பி.ஐ (மா) |
| c) மனோகர் ஜோஷி | 3. சிவசேனா |
| d) சோம்நாத் சட்டர்ஜி | 4. காங்கிரஸ் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| **B)** | **4** | **1** | **3** | **2** |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

173. ராஜிவ் காந்தி அறிவுசார் சொத்து உரிமை சட்டப் பள்ளி அமைந்துள்ளது ________ நகரில் ________ மாநிலத்தில்.

A) சென்னை - தமிழ்நாடு — B) உஜ்ஜைனி - மத்திய பிரதேஷ்

C) கொச்சின் - கேரளா — **D) கார்க்பூர் - மேற்கு வங்காளம்**

174. கொடுக்கப்பட்டவைகளில் எந்த ஒன்று சரியாக பொருந்தாது?

A) வாரிஸ்தா பென்சன் பீமா யோஜனா - வயதானவர்களின் சமூக பாதுகாப்பு

B) பிரவேசி காசுல் விகாஸ் யோஜனா - வெளிநாட்டில் வேலைவாய்ப்பு தேடுவதற்க

C) PM பாசல் பீமா யோஜனா - விவசாயிகள் காப்புரிமைத் திட்டம்

**D) PM கிராம சாடக் யோஜனா - கிராமபுற பெண்கள் முன்னேற்றம்**

175. சுவாசித்தலில் சயனைட் எதிர்ப்புத்திறன் இவற்றில் காணப்படுகிறது.

**A) தாவரங்களில் மட்டும்** — B) விலங்குகளில் மட்டும்

C) தாவரங்கள் மற்றும் விலங்குகளில் — D) தாவரங்கள் மற்றும் நுண்ணுயிர்களில்

176. ஆண் பாலின ஹார்மோன் “டெஸ்டோஸ்டீரோனை” உற்பத்தி செய்வது

**A) லெய்டிக் செல்கள்** — B) செர்டோலை செல்கள்

C) ஜெர்மினர் எபிதீலியல் செல்கள் — D) ஸ்பெர்மெட்டோகோனியல் செல்கள்



விடியல்
ஜெ ஜார்

177. உள்ளீடற்ற அரைக்கோளத்தின் மொத்த புறப்பரப்பு

A) $2\pi(R^2 + r^2)$ ச. அலகுகள்  B) $2\pi(R^2 - r^2)$ ச. அலகுகள்

C) $\pi(3R^2 + r^2)$ ச. அலகுகள்  D) $\pi(3R^2 + r^2)$ ச. அலகுகள்

178. ஒரு லீப் வருடத்தில் 53 வெள்ளிக்கிழமைகள் அல்லது 53 சனிக்கிழமைகள் வருவதற்கான நிகழ்தகவு காண்க.

A) $\frac{1}{7}$  B) $\frac{2}{7}$  C) $\frac{3}{7}$  D) $\frac{4}{7}$

179. பொருத்துக.

a) அன்னிபெசன்ட்  1. கேசரி

b) பிபின் சந்திரபால்  2. காமன் வீல்

c) பூபேந்திர நாத் தத்  3. நியூ ஆசியா

d) திலக்  4. யுகாந்தர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 2 | 3 | 4 | 1 |

180. தவறான பொருத்தத்தைக் கண்டுபிடிக்கவும்?

A) இந்திய ஐரோப்பிய குடும்ம் - ஆர்யா  B) ஆஸ்டிரிக் குடும்பம் - நிசாடா

C) திராவிட குடும்பம் - திராவிடா  D) சைனா திபெத்திய குடும்பம் - முன்டா

181. ________ லிருந்து இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது

A) 1862ம் வருடம்  B) 1872ம் வருடம்  C) 1882ம் வருடம்  D) 1892ம் வருடம்

182. பஞ்சாயத்து அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அந்தஸ்து கொடுப்பதற்கு முன் முயற்சிகள் எடுக்கப்பட்டது எந்த குழுவின் பரிந்துரையின் பெயரில்?

A) G.V.K. ராவ் குழு  B) L.M. சிங்வி குழு

C) அசோக் மேத்தா குழு  D) பல்வந்த்ராய் மேத்தா குழு

183. பின்வரும் இந்தய அரசியலமைப்பின் எந்தவிதி உச்சநீதி மன்றத்திற்க சிறப்பு அனுமதி மனுவினை ஏற்கும் அதிகாரத்தை வழங்குகின்றது?

A) விதி 136  B) விதி 32  C) விதி 139  D) விதி 226

184. புது டில்லியில் 2017ம் ஆண்டு மார்ச் மாதத்தில் எந்த அமைப்பு க்யான் சங்கம் மாநாட்டினை [அறிவு உச்சி மாநாடு] நடத்தியது?

A) பிரஜ்னா பார்வா  B) கிறிஸ்துவ கல்வி கழகம்

C) இந்திய இஸ்லாமிய மாணவர்கள் இயக்கம்  D) இந்திய ஜனநாயக வாலிபர் அமைப்பு

185. பிரதம மந்திரி கிரிஷன் சாய் யோஜனா திட்டத்தின் நோக்கம் என்ன?

A) சுற்றுபுற சூழல்  B) நிலத்தடி நீர் செறிவூட்டுதல்

C) தணி உற்பத்தி  D) இலவச உணவு

186. கீழே உள்ளவைகளில் எது பாஸ்பரஸ் உள்ள பூச்சிக் கொல்லி

A) டிடிடி(DDT) B) பி.எச்.சி (BHC) C) 2,4-டி (2,4-D) **D) பாரத்தியான்**

187. பொருத்துக

a. கலப்பு உரங்கள் 1. டி.எ.பி

b. சிக்கலான உரங்கள் 2. என்.பி.கே

c. உயிர் உரங்கள் 3. எண்ணெய் கேக்

d. கரிம நைட்ரஜன் உரங்கள் 4. பாசி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| **B)** | **2** | **1** | **4** | **3** |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

188. நிகழ்வெண் பலகோணம் வரைய ஒரு வழிகாட்டியாக (வரைய) இருப்பது

A) நிகழ்வெண் **B) நிகழ்வெண் செவ்வகம்**

C) குவிவு நிகழ்வுகள் D) செவ்வகம்

189. 100 ஆட்கள் ஒரு வேலையை 7 நாட்களில் முடிக்கக் கூடும் எனில் அதே வேலையை 35 நாட்களில் முடிக்க எத்தனை பேர் தேவைப்படுவர்?

**A) 20 ஆட்கள்** B) 50 ஆட்கள் C) 30 ஆட்கள் D) 25 ஆட்கள்

190. 100, 95,90,85.........என்ற தொடர் வரிசையின் 21வது உறுப்பு என்ன?

A) 10 B) 20 **C) 0** D) 5

191. சுருக்குக. $\frac{2x^4 - 162}{(x^2+9)(2x-6)}$

A) $x^2 - 9$ **B) $x + 3$** C) $x + 6$ D) $x - 6$

192. சோழ - சாளுக்கிய வழியில் வந்த முதல் அரசன் யார்?

A) இரண்டாம் இராஜ ராஜன் B) விக்ரம சோழன்

**C) முதலாம் குலோத்துங்கன்** D) ஆதி ராஜேந்திரன்

193. கேரளாவின் வைக்கம் சத்தியாகிரகம் நடைபெற்ற ஆண்டு

A) 1918 **B) 1924** C) 1913 D) 1928

194. பெரியார் நீதிக்கட்சியின் கருத்துக்களை ஒன்றிணைத்து எந்த புதிய கட்சியை ஆரம்பித்தார்.

**A) திராவிட கழகம்** B) திராவிட முன்னேற்ற கழகம்

C) சுதந்திரா கட்சி D) அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்

195. காந்திய முறை மற்றும் வளர்ச்சியின்படி இந்திய திட்டமிடல் முறையில், கீழ்காண்பவற்றுள் எந்த மாற்றம் கோரப்படவில்லை?

A) உற்பத்தி சார்ந்த திட்டமிடலுக்குப் பதிலாக வேலை நோக்கான திட்டமிடல்

**B) வேலை நோக்கான திட்டமிடலுக்குப் பதிலாக உற்பத்தி நோக்கான திட்டமிடல்**

C) சிறிய மற்றும் குடிசை தொழிலகங்களுக்குச் சாதகமானது

D) நுகர்பொருள் உற்பத்தி செய்யும் பெரிய தொழிலகங்களுக்கு எதிரானது

196. “மத சார்பின்மை” என்ற வார்த்தை அரசியலமைப்பு சட்டத்தின் முகப்பு வரியில் இணைக்கப்பட்டதற்கு முன்னரே உச்ச நீதிமன்றம் “மத சார்பின்மை” அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கூறுகளில் ஒன்று என்று கூறி ஆண்டு எது?

A) 1975 **B) 1973** C) 1976 D)1981

197. கொடுக்கபட்டுள்ளவைகளில் திறன் இந்தியா திட்டத்தின் தவறான குறிக்கோள் எது?

A) நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தலே இதன் குறிக்கோளாகும்

B) திறன் பயிற்சி திட்டத்தின் மூலம் நிதி தொடர்பான தடைகளை நீக்குவது இதன் குறிக்கோளாகும்.

**C) இந்தியாவில் 34 லட்சம் இளைஞர்களுக்கு ரூ.50,000 முதல் 1.5லட்சம் வழங்குவது இதன் பணியாகும்**

D) காஷூல் பாரத் என்பது தான் இதன் முழக்கமாகும்.

198. ஹைட்ரஜன் புதிய அமைப்பு (எதிர்மறை மின்னூட்டம் கொண்ட ஹைட்ரஜன் தொகுப்பு) எந்த நாட்டு இயற்பியல் அறிஞர்களால் உருவாக்கப்பட்டது?

A) இந்தியா **B) ஆஸ்திரியா** C) ஆஸ்திரேலியா D) சீனா

199. கவிக்கோ அறக்கட்டளையின் கவிக்கோ விருது 2017 ஆம் ஆண்டு __________ வழங்கப்பட்டது.

**A) கவிஞர் முத்துலிங்கம்** B) கவிஞர் வைரமுத்து

C) கவிஞர் வாலி D) கவிஞர் விஜய்

200. கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் எத்தனை சதவீத நலிவடைந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகள் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும்?

**A) 25** B) 26 C) 27 D) 28


TNPSC

Group IV & VAO

தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கும் நாள் 12.08.2017

இடம் : விடியல் பயிற்சி மையம்,

MTC வளாகம், அம்மா உணவகம் அருகில்,

கொசப்பேட்டை, வேலூர்.

வேலூர் - 9092997509, 8122706441